<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>

<u>**அ.வ.எண். 93/2024**</u>

2025-ம் வருடம் மார்ச் திங்கள் 06-ம் நாளன்று வாதி சாட்சியாக வா.சா.2-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : சுப்பிரமணியன் | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

<u>முதல் விசாரணை:-</u>

நான் ஆலமரத்துப்பட்டி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செயலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் அடிப்படையில் ஆவணங்களுடன் முன்னிலையாகியுள்ளேன். அழைப்பாணையில் கேட்டுள்ள, எங்கள் வங்கி உறுப்பினர் உமாமகேஸ்வரி என்பவருக்கு எங்கள் வங்கியிலிருந்து வழங்கிய கடன் கணக்கு எண். 259 சம்மந்தப்பட்ட கடன் விண்ணப்பம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள், கடன் உத்தரவு ஆகியவற்றின் புகைப்பட நகல் தாக்கல் செய்கிறேன். அசல் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அசலுடன் ஒப்பிடப்பட்டது. அது சா.சா.ஆ.1.

<u>குறுக்கு விசாரணை</u>

கடன் வாங்குவதற்கு உமாமகேஸ்வரி எங்கள் வங்கியை அணுகினார். கடன் கேட்டு விண்ணப்பம் கொடுக்கவில்லை. கிராம நிர்வாக அதிகாரி சான்றிதழ் மற்றும் அடங்கல் சேர்த்து கொடுத்தார். அதனுடன் அவருடைய

ஆதார் அடையாள அட்டை, குடும்ப அட்டை, அடையாள அட்டை மற்றும் வங்கி பாஸ்புத்தகம் ஆகியவற்றை இணைத்திருந்தார். மேலும், கடன் வழங்குவதற்கு அவரது அப்பா வழங்கிய கடன் வழங்குவதற்கு தடையின்மை சான்றிதழையும் இணைத்திருந்தார். வாதி உமாமகேஸ்வரியின் அப்பா உடன் வந்தார். கடன் வழங்குவதற்கான தடையின்மை சான்றிதழில் தட்டச்சு செய்யப்பட்டுள்ள வாசகங்களுக்கும், அவரது அப்பாவின் கையெழுத்திற்கும் இடையே இடைவெளி உள்ளது. வெள்ளைச்சாமி நேரில் வந்து வங்கியில் கொடுத்தார் என்பதற்கான பதிவுகள் எதுவும் வங்கியில் பராமரிக்கவில்லை. கடன் வழங்குவதற்கான தடையின்மை சான்றிதழை உமாமகேஸ்வரியின் அப்பா என் முன்பாக கையெழுத்து போட்டார். அதில் இடைவெளியில்லாமல் கையெழுத்து போடவேண்டும் என்று எனக்கு தெரியும். இடைவெளியில்லாமல் கையெழுத்து போடவேண்டும் என்று நான் அறிவுறுத்தவில்லை என்றால் அவர் அதில்தான் கையெழுத்து போட்டார். வாதிக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், வெள்ளைச்சாமி வங்கிக்கு வந்து கையெழுத்து போடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கிராமநிர்வாக அதிகாரி சான்றிதழ் மற்றும் அடங்கல் ஆகியவற்றின் உண்மை தன்மையை நான் சரிபார்க்கவில்லை. சட்டப்படி அனுமதிக்க இயலாத ஆவணங்களின் அடிப்படையில் நான் கடன் வழங்கினேன் என்று கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கடன் வழங்க தடையின்மை சான்றிதழை வெள்ளைச்சாமி எந்த தேதியில் எழுதிக்கொடுத்தார் என்றால் 22.07.2023 அன்று கையெழுத்து போட்டார். அந்த தடையின்மை சான்றிதழில் எழுதிக்கொடுத்த தேதி குறிப்பிடவில்லை. தடையின்மை சான்றிதழை வாதிக்கு ஆதரவாக தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கடன் விண்ணப்பிக்கும்போது, வாதி கரூர், ...........

தாந்தோணி, 3 வது குறுக்குத்தெரு, கதவு எண். 5/69 ல் வசித்து வந்தார். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் முழுமைபெறாமல், அவசரகதியில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்
மாவட்ட நீதிபதி,
கரூர்.